# ஆகஸ்ட் - 20 - பொதுக்கால 20ம் வார ஞாயிறு

**“உமது நம்பிக்கை பெரியது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்” (மத்.15:28)**

## முதல் வாசகம் : ஏசாயா 56 : 1, 6 – 7

ஆண்டவர் கூறுவது இதுவே. நீதியை நிலைநாட்டுங்கள், நேர்மையைக் கடைபிடியுங்கள் நான் வழங்கும் விடுதலை அண்மையில் உள்ளது. நான் அளிக்கும் வெற்றி விரைவில் வெளிப்படும். ஆண்டவருக்குத் திருப்பணி செய்வதற்கும், அவரது பெயர்மீது அன்புகூர்வதற்கும், அவர்தம் ஊழியராய் இருப்பதற்கும், தங்களை ஆண்டவரோடு இணைத்துக்கொண்டு ஓய்வுநாளைத் தீட்டுப்படுத்தாது கடைப்பிடித்து, தம் உடன்படிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளும் பிற இனமக்களைக் குறித்து ஆண்டவர் கூறுவது. அவர்களை நான் என் திருமலைக்கு அழைத்துவருவேன் இறைவேண்டல் செய்யப்படும் என் இல்லத்தில் அவர்களை மகிழச்செய்வேன் அவர்கள் படைக்கும் எரிபலிகளும் மற்றப்பலிகளும் என் பீடத்தின் மேல் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனெனில், என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய ”இறைமன்றாட்டின் வீடு” என அழைக்கப்படும்.

**பதில்பாடல் :** கடவுளே மக்களினத்தார் உம்மைப் புகழ்ந்து போற்றிடுவர்

## இரண்டாம் வாசகம் : உரோமையர் 11:13 –15, 29-32

சகோதர சகோதரிகளே!, ”தங்களுக்குச் சொல்லப்படாததை அவர்கள் காண்பர் தாங்கள் கேள்விப்படாததை அவர்கள் புரிந்துகொள்வர்” என்று மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா!எனவேதான் நான் உங்களிடம் வரப் பலமுறை நினைத்தும் அது தடைப்பட்டது.ஆனால் இப்பொழுது இந்தப் பகுதிகளில் எனக்கு இனி வேலையில்லை. மேலும் நான் ஸ்பெயின் நாட்டுக்குப் போகும்போது உங்களைக் காண வரவேண்டும் என்று பல ஆண்டுகளாகவே ஏங்கிக் கொண்டிருக்கிறேன்.போகும் வழியில் உங்களைக் கண்டு, சில நாள்களேனும் உங்களோடு தங்கி மகிழ்ந்த பின்னர் என்னை அங்கிருந்து நீங்கள் வழியனுப்பி வைப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.எனினும் தற்பொழுது இறைமக்களுக்குச் செய்யப்படவேண்டிய பொருளுதவியை முன்னிட்டு எருசலேமுக்குப் புறப்படுகிறேன்.எருசலேமில் வாழும் ஏழை இறைமக்களுக்கு சிறிது பொருளுதவி செய்ய மாசிதோனியா, அக்காயா மாநிலத்தார் முன்வந்துள்ளனர்.ஆம், மனமுவந்து முன்வந்துள்ளனர். எருசலேமில் வாழும் இறைமக்களுக்கு உண்மையில் பிற இனத்தார் கடன்பட்டவர்களே. எவ்வாறெனில், ஆவிக்குரிய கொடைகளில் இவர்கள் அவர்களின் பங்காளிகள் ஆயினர் அதற்கேற்ப உடலைச் சார்ந்த தேவைகளில் அவர்களுக்கு ஊழியம் செய்ய இவர்கள் கடமைப்பட்டவர்கள் அல்லவா?எனவே, தண்டல் செய்த தொகையை நானே அவர்களிடம் பொறுப்பாய் ஒப்படைத்துவிட்டு, என் வேலை முடிந்த பின்னர் உங்கள் ஊரின் வழியாக ஸ்பெயினுக்குப் போவேன்.

## நற்செய்தி : மத்தேயு 15 : 21 – 28

அக்காலத்தில் இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தீர், சீதோன் ஆகிய பகுதிகளை நோக்கிச் சென்றார்.அவற்றின் எல்லைப் பகுதியில் வாழ்ந்து வந்த கானானியப் பெண் ஒருவர் அவரிடம் வந்து, ”ஐயா, தாவிதீன் மகனே, எனக்கு இரங்கும் என் மகள் பேய் பிடித்துக் கொடுமைக்குள்ளாகி இருக்கிறாள்” எனக் கதறினார்.ஆனால் இயேசு அவரிடம் ஒரு வார்த்தைகூட மறுமொழியாகச் சொல்லவில்லை. சீடர்கள் அவரை அணுகி, ”நமக்குப் பின்னால் கத்திக்கொண்டு வருகிறாரே, இவரை அனுப்பிவிடும்” என வேண்டினர்.அவரோ மறுமொழியாக, ”இஸ்ரயேல் குலத்தாருள் காணாமற்போன ஆடுகளாய் இருப்போரிடமே நான் அனுப்பப்பட்டேன்” என்றார்.ஆனால் அப்பெண் அவர்முன் வந்து பணிந்து, ”ஐயா, எனக்கு உதவியருளும்” என்றார். அவர் மறுமொழியாக, ”பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல” என்றார்.உடனே அப்பெண், ”ஆம் ஐயா, ஆனாலும் தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே” என்றார்.இயேசு மறுமொழியாக, ”அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்” என்று அவரிடம் கூறினார். அந்நேரம் அவர் மகளின் பிணி நீங்கியது.

**தியானம்:** “நான் உன்னோடு இருப்பேன். நீ எங்கு சென்றாலும் உனக்கு நான் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பி வரச்செய்வேன். ஏனெனில் நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிடமாட்டேன்” (தொ.நூ.28:15). மனிதர்கள் நமக்கு ஆயிரம் வாக்குறுதிகள் தரலாம் ஆனால் பெரும்பாலும் அவர்கள் அந்த வாக்குறுதிகளை இறுதிவரை காப்பாற்றுவதில்லை. கணவன் மனைவி திருமண பந்தத்தின்போது நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாயிருந்து இறுதிவரை ஒருவரை ஒருவர் மதிக்கவும், அன்புசெய்யவும், இன்ப துன்பங்களில் உடன் இருப்போம் என்று வாக்குறுதி வழங்குகின்றார்கள். நம்மில் எத்தனைபேர் இந்த வாக்குறுதிகளை காப்பாற்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நான் உங்களை என் கண்ணின் மணிபோல பார்த்துக் கொள்வேன் என்று உறுதிப்பாடு கொடுத்த எத்தனை பிள்ளைகள் தங்கள் பெற்றோரை வீதியிலும், அனாதை இல்லங்களிலும், முதியோா் மையங்களிலும் கைவிட்டுச் செல்கின்றார்கள். என்ன துன்பம் வந்தாலும் நான் உன்னோடு இருப்பேன் என்று சொன்ன நம் நண்பர்கள் நம்முடைய ஆபத்துக் காலத்திலே எங்கு மறைந்து போனார்கள். இதுதான் மனித சுவாபம். மனிதன் தன்னுடைய வாக்குறுதிகளிலே நிலைத்து நிற்பது இல்லை என்றுதான் கூறலாம். அது அவர்களுடைய இயலாமையோ அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைகளாகவோ இருக்கலாம். ஆனால் நம்முடைய இறைவன் வாக்குமாறாத தெய்வம். நாம் அவருக்கு பிரமாணிக்கம் இல்லாமல் இருந்தாலும் அவர் தம்முடைய வாக்குறுதிகளில் பிரமாணிக்கமாக இருக்கின்றார் என்பதைத்தான் இன்றைய முதல் இரண்டு வாசகங்களும் நமக்கு உறுதியளிக்கின்றன. இன்றைய நற்செய்தி வாசகத்தில் நாம் காண்பதுபோல கடவுள் நம்மை கைவிட்டதுபோல நமக்குத் தோன்றினாலும் நம்முடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தி அதனை கனப்படுத்துவதற்காகவே நம்மை ஆண்டவர் சில துன்பங்களுக்கும் வேதனைகளுக்கும் கைவிடப்பட்ட நிலைக்கும் உள்ளாக்குகின்றார். அவர் நம்மை புடம்போட்டுப்பார்ப்பாரே தவிர, நம்மை அவர் ஒருபோதும் கைவிடமாட்டார். “நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன்! உன்னை விட்டு விலகமாட்டேன் என்று அவர் கூறியிருக்கின்றார். இதனால் நாம் துணிவோடு ஆண்டவரே எனக்குத் துணை, நான் அஞ்சமாட்டேன். மனிதர் எனக்கு எதிராக என்ன செய்ய முடியும்? என்று கூறலாம்” (எபி.13:5-6). எனவே இறைவனில் நாம் முழு நம்பிகை கொண்டு வாழ்வதன்மூலம் நமது தேவைகள், வேண்டுதல்கள் அனைத்தையும் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டு மனமகிழ்வோடும் சமாதானத்தோடும் வாழுவோம்.